பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
0776906182

தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்
புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 74

## தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா - பிரதமராக தொடருவார்

*பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். எவ்வாறாயினும் அக்கட்சிக்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்படும் வரை தாம் பிரதமராக நீடிப்பதாக பிரித்தானிய பிரதமர் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி புதிய தலைவரை தேர்ந்தெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*



## போராட்டத்தை வென்றெடுக்கும் ஒன்றிணைந்த பிரகடனம் வெளியீடு

போராட்டத்தை வென்றெடுக்கும் பிரகடனம் எனும் மகுடத்தில் சர்வ கட்சி செயற்பாட்டாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த மாநாட்டின் பிரகடன வெளியீட்டு நிகழ்வு கொழும்பு ரமடா ஹோட்டலில் இடம் பெற்றது. போராட்டத்தை வெல்லும் பிரகடனம் ஆறு சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளதோடு. இதன் வெற்றிக்காக சர்வ கட்சிப் போராளிகள் தம்மை அர்ப்பணிப்பதாகவும் தெரிவித்தனர்.

நாட்டில் ஜனநாயகம் மேலோங்கும் ஆட்சியை நிறுவி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக முன்னெடுக்கப்படும் போரா ளிகளின் முயற்சிகளை பாராட்டுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர். அதன் ஜனநாயக ரீதியிலான அனைத்து கோரிக்கைகளுக்கும் மாற்றுக்கருத்து இன்றி தான் உடன்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனாதிபதி மட்டுமல்ல என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர். அவரது நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்துக்கும் நீண்டு செல்வதாகவும் அவர் தெரிவித்தார். எனவே. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நீக்குவது தொடர்பில் தமக்கு நிலையான ஒரு கருத்து இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர். போராட்டத்தில் ஈடுபடும் அனைத்து குழுக்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்பும் பயணத்திற்கு பங்களிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.





## வேகமாக பரவும் இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சல்

*தற்போது வேகமாகப் பரவி வரும் இன்புளுவன்சா வைரஸ். கர்ப்பிணித் தாய்மார்களுக்கும். குழந்தை பிரசவித்த தாய்மார்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதனால் மிகவும் அவதானமாக இருக்குமாறு மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனாரோல் தெரிவித்துள்ளார். கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தவரை முகக் கவசம் அணியுமாறும். வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேலும் மக்கள் நெரிசல் மிகுந்த இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.*

*இந்த நாட்களில் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரை சந்தித்து மருத்துவமனையில் அனுமதிக்கவும். தாயும் குழந்தையும் கூடிய விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால். அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்க தேவையான சிகிச்சை அளிக்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.*

*(அரசாங்க தகவல் திணைக்களம்)*

## பணவீக்கம் 70 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும்

தனது கணிப்பின் படி பணவீக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். அதன்படி. எதிர்வரும் சில மாதங்களினுள் பணவீக்கம் 70 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும். தற்போது மேற்கொண்டுள்ள கொள்கை அடிப்படையிலான செயற்பாடுகள் காரணமாக எதிர்வரும் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதலே பணவீக்கம் பாரியளவில் குறைவடையக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல். உலகளவிலான எரிபொருள் விலை மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளின் வீழ்ச்சி தொடர்பிலான அனுமானங்கள் இந்த கணிப்பில் அடங்குவதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். இதேவேளை. இந்நாட்டு அந்நிய செலாவணியை வலுப்படுத்துவதற்காக பல நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதன்படி. சர்வதேச நாணயச் சபையுடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை. ஜூன் மாத இறுதியில் இந்நாட்டு உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 1.859 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. மேலும். வெளிநாட்டு நாணய இருப்புகள் 1.750 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## டொலர் செலுத்துவோருக்கு எரிபொருள் வழங்கும் புதிய திட்டம்

அத்தியாவசிய தேவைகளுக்காக டொலர் செலுத்தி எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்துக்கொள்வதற்கான வசதிகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஏற்படுத்தியுள்ளது. அதன்படி, பதிவு செய்வதற்கான வசதிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் மேலும் பல நிறுவனங்கள்

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் மேலும் பல நிறுவனங்களை ஒதுக்குவதற்கான புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த ரக்னா லங்கா செக்யூரிட்டி நிறுவனம், செலந்திவா இன்வெஸ்ட்மென்ட்ஸ் மற்றும் ஹோட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) தனியார் நிறுவனம் ஆகியவை இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளன.

## ரஷ்ய எரிபொருள் நிறுவன பிரதிநிதிகள் இலங்கை வருகை

இரண்டு ரஷ்ய எரிபொருள் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர். இரு பிரதிநிதிகளும் நேற்று காலை நாட்டை வந்தடைந்துள்ளனர். இந்த விஜயத்தின் போது, எரிபொருள் இறக்குமதி தொடர்பில் சம்பந்தப்பட்ட எரிபொருள் நிறுவன பிரதிநிதிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

ரஷ்யாவின் மொஸ்கோவிற்கும் கட்டுநாயக்கவிற்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் பஹ்ரைன் ஊடாக இந்த நாட்டிற்கு வரவேண்டியிருந்தது. குறித்த பிரதிநிதிகளை வரவேற்க தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச உள்ளிட்டோர் பிரசன்னமாகியிருந்தனர்.

## ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே மீது துப்பாக்கி சூடு

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஷின்ஸோ அபேவை சிகிச்சைக்காக மருத்துவமனை கொண்டு சென்றனர். ஷின்ஸோ அபே, சுயநினைவின்றி இருப்பதாகவும், மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் ஜப்பான் ஊடகம் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது மர்ம நபர் ஷின்ஸோ அபேவை துப்பாக்கியால் சுட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஷின்ஸோ அபேவை சிகிச்சைக்காக மருத்துவமனை கொண்டு சென்றனர். ஷின்ஸோ அபே, சுயநினைவின்றி இருப்பதாகவும், மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் ஜப்பான் ஊடகம் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சம்பவம் இன்று காலை 8.29 மணியளவில் நடந்துள்ளது. அந்த நேரத்தில் துப்பாக்கிச் சூடு போன்ற சத்தம் கேட்டது என்றும், சந்தேகத்தின் பேரில் ஒரு ஆண் நபர் ஒருவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.



## முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நீடிப்பு

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் மே 15 ஆம் திகதி வரை நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற நாசகார செயல்களால் சொத்துக்கள் சேதமடைந்த மக்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடுவதற்கும் உரிய நபர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குமான செயல்முறையைத் தீர்மானிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விசாரணைக் குழுவை நியமித்தார். அதனப்படையில், முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் திகதியை 08.07.2022 இல் இருந்து 22.07.2022 வரை நீடிக்க குறித்த குழு தீர்மானித்துள்ளது.

## ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு வழங்க முடியும்

ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு வழங்க முடியும் என பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் (06) கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே ஜனக ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் பார்த்தபோது இங்கு ஏதோ தவறு இருப்பதை உணர்ந்தோம். இந்த எண்ணெய் CPC யினால் CEB க்கு வழங்கப்படுகிறது. இது தொடர்பில் ஆராய்ந்த போது அமைச்சர் முன்வைத்த விலைச்சூத்திரம் எவ்வித அடிப்படையுமின்றி முன்வைக்கப்பட்டுள்ளதை உணர்ந்தோம்.

**அமைச்சர் மஹிந்த அமரவீர - அமைச்சரா தயாரித்துள்ளார் அல்லது அமைச்சு அதிகாரிகளா?**

"அது எனக்கு தெரியாது. அமைச்சர்தான் ட்வீட் செய்தார். அவருடைய ட்விட்டரில் இருந்துதான் நான் பெற்றேன். எமக்கு முழுமையான தரவு கிடைத்தது. இறக்குமதி செலவு மற்றும் TAX ஆகியவற்றைக் கண்டுபிடித்தோம். இரண்டுக்கும் இடையே பொதுவாக 150-200 ரூபாய் வித்தியாசம் இருக்கும். அப்படியாயின், எமக்கு டீசல் இறக்குமதி செய்வதற்கான அடிப்படை செலவு CIF குறிப்பிட்டுள்ள மதிப்பு 174 டொலர்களாகும்.

ஆனால் தரவுகளைப் பார்க்கும்போது, இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளின் விலை 174 அல்ல. இறக்குமதி செய்யப்பட்ட விலை 100 - 110 டொலர்களாகும். IOC ஜூலை முதலாம திகதி ஒரு தொகுதி டீசலைக் கொண்டு வந்துள்ளது. உண்மையில், எரிபொருள் இறக்குமதி செலவு 350 ரூபாவுக்கு அதிகமாகாது. இது பொய்யல்ல. ஆவணங்களில் உள்ள உண்மைக் கதை."

**அமைச்சர் மஹிந்த அமரவீர - அப்படியாயின் 250 ரூபாய்க்கு குறைவாகவா கொண்டு வரப்பட்டுள்ளது?**

"இப்போது எங்கள் பிரச்சினை என்னவென்றால், ஃபர்னஸ் ஒயிலின் செலவு 171 ரூபாய். CPC அதை CEB க்கு 419 ரூபாய்க்கு கொடுக்கிறது. அவர்கள் ஒரு லீற்றருக்கு 250 ரூபாய் வசூலிக்கிறார்கள்."

**அமைச்சர் மஹிந்த அமரவீர - சாதாரண மக்களுக்கு தேவையாக உள்ளது டீசல், பெற்றோல்தானே? 250 ரூபாய்க்கு வழங்க கூடியதாக இருக்கும் போது 400 ரூபாய்க்கு வழங்குவதாகதானே தாங்கள் சொல்கிறீர்கள் ?**

"ரூ. 400 – ரூ. 450 என்று யாராவது சொன்னால் அது பொய். இது ஒரு உண்மைக் கதை, நான் உங்களுக்கு சொல்கிறேன், இறக்குமதியின் செலவு ரூ. 200 ஆக இருக்கும்போது எப்படி 400 ரூபா ஆகும். அப்படி நடக்க முடியாது. வரி செலுத்திய பிறகு, ஒவ்வொரு எரிபொருள் விலையும் ரூ.250, ரூ.170, ரூ.180. ரூ.220. இந்த உண்மைக் கதை கடந்த வாரம் வரையானது. இந்த சூத்திரம் முழுவதுமாக பிழையானது. இது நடந்துள்ளது. தரவுகளை வழங்கியுள்ளேன்.

குறைந்த விலையில் ஒரு லீற்றர் எரிபொருளை வழங்கும் முறை தொடர்பில் வினவியபோதே ஜனக ரத்நாயக்க இதனை விளக்கினார்.